(இ-ள்) அல்லியென்பது, வெள்ளாம்பல்- காயாமரம் - உள்ளிதழுக்கும் பெயர் அல்லென்பது, இரவு-இருளுக்கும்பெயர், ஆகமென்பது, மார்பு-உடம்புக்கும்பெயர், சில்லியென்பது, வட்டம்-சிறுகீரை-தேருருள்-சிள்வீட்டுக்கும்பெயர், வல்லியென்பது, இடைச்சேரி-படர்கொடி-அளவு-விலங்குக்கும்பெயர்-எ-று. ௮

RangaRakes tamilnavarasam.com

இல்லில்லாளில்லையென்றவிராசிசாவிடம்வீடாறே
மலைவளமைவலிதிருமாலவனுடன்மூபபோ
சில்லையென்பதுபூரணைசிள்வீடுதூர்த்தைக்குப்பேர்
ஒல்லையேயவிரவுதொல்லைகடும்புடனசிறுபோதாமே

(இ-ள்) இல்லென்பது-மனைவி. இல்லையென்பது-இராசி-சாவு-இடம்-வீடு இவற்றுக்குப்பெயர். மலையென்பது-வளமை-வலிமை-திருமால்-கூடு இவற்றுக்குப்பெயர். சில்லையென்பது, பூரணை-சிள்வண்டு-தூர்த்தைக்குப்பெயர். ஒல்லையென்பது, காலவிரைவு-பழைமை வேகம் சிறுபொழுதுக்குப்பெயர் எ-று.

வில்லென்பமூலநாளாமவெஞ்சிலையொளியுமப்பேர்
வல்வலிவிரைவுசூதமல்லெதிர்தல்லையதிரதமேன்றல்
புல்புலிபுணர்ச்சிபுன்மைபுல்லபனையனுடநாளாம்
கொல்லென்பதச்சசொல்லையங்கொல்லேயேவல்வருந்தாதாமேயோர்

(இ-ள்) வில்லென்பது மூலநட்சத்திரம்-வில்-பிரகாசம் இவற்றுக்குப்பெயர், வல்லென்பது, வலிமை சீக்கிரம் சூதாடுகருவி இவற்றுக்குப்பெயர், மல்லென்பது, எதிர்தல்-தோன்றலுக்குப்பெயர், புல்லென்பது-புலி-கலவி-அற்பம்-புல்-பனைமரம்-அனுடநட்சத்திரம் இவற்றுக்குப்பெயர், கொல்லென்பது, அச்சம்-சொல் ஆயுதம்-கொல்லென்னும் ஏவல் இவற்றுக்குப்பெயர் எ-று. ௰

மால்புகர்பெருமைமேகமாயவனமயக்கங்காற்றே
ஆலோடவிரண்டுசொல்லுமாமெனபதல்லவும்பேர்
வால்வெண்மைமிகுதிதூய்தாம்வசந்தம்தென்றல்காமன்
சால்புமாட்சிமைசான்றாண்மைசாற்றியவிருபோர்தானே

(இ-ள்) மாலென்பது, புகர்-பெருமை-மேகம்-திருமால்-மயக்கம் காற்றுக்கும்பெயர், ஆலென்பது, ஆலென்பதும்-ஆமென்பதற்கும்- அல்லவென்பதற்கும்பெயர், வாலென்பது, வெண்மை மிகுதி-சுத்தம் இவற்றுக்குப்பெயர், வசந்தமென்பது, தென்றல்-மன்மதனுக்கும்பெயர், சால்பென்பது. மாட்சிமை-சால்புடைமைக்குப்பெயர் எ-று. ௰௧

வலம்புரிசங்குநந்தியாவட்டமோர்மரமுமப்பேரோ
புலம்பொலிதனிமையச்சம்பொய்யென்பபொய்கைபோதாம்
சிலம்பொலிநெகிழ்குன்றுஞ்செருந்திபஞ்சரம்வாட்கோரை
விலங்குகாற்றளைகுறுக்குமிருகத்தின்பொதுவுமாமே

(இ-ள்) வலம்புரியென்பது, சங்கு-நந்தியாவட்டம்- ஓர்மரத்திற்கும்பெயர், புலம்பென்பது, சத்தம்-தனிமை-பயத்திற்கும்பெயர், பொய்யென்பது, அசத்தியம்-பொய்கைக்கும்பெயர், சிலம்பென்பது, சத்தம்-சிலம்பு-மலைக்கும்பெயர், செருந்தியென்பது, செருந்திமரம் - வாட்கோரைக்கும் பெயர், விலங்கென்பது, கால்விலங்கு குறுக்குமிருகத்தின் பொதுவிற்கும் பெயர்-எ-று. ௰௨

RangaRakes tamilnavarasam.com

உலக்மேதிசைவின் பூமி யுயர்குணஞ்சனமுயர்ந்தோர்
அலவனேநண்டுபூனை யம்புலிகடகராசி
இலயமேகூத்துங்கூத்தின் விகற்பமுமியம்பலாகும்
வல்லவையஞ்சப்பெண்வல்லவோன் வருண்டதாரணசிபுளாடாம்

(இ-ள்) உலகமென்பது, திக்கு-ஆகாயம்-பூமி-குணம்-சனம்-உயர்ந்தோருக்குப்பெயர். அலவனென்பது, நண்டு-பூனை-சந்திரன்-கடகவிராசிக்கும்பெயர். இலயமென்பது, கூத்து-கூத்தின்வேறுபாட்டிற்கும்பெயர், வல்லவையென்பது, காளி-ஏவற்பெண்-வல்லவனுக்கும்பெயர். வருண்டையென்பது, எண்காற்புள்-ஆட்டுக்கும்பெயர்-எ-று. (௯௩)

கலாபமேமணிவடமமே கலையயிற்குமுப்பேர்
சிலீமுகமுலைக்கண்வண்டு சிதநிரபுங்கமாகும்
சலாகமணியணிமாராசத்து சலாகைமாகுமென்ப
விலோகமென்மயிர்பதாகை விடமென்பநஞ்சினாமம்

(இ-ள்) கலாபமென்பது, மணிவடம்-பதினறுகோவை-மணியுண்மாதரிடையணி-மயிலிறகுக்கும்பெயர், சிலீமுகமென்பது, முலைக்கண்-வண்டு-அம்புக்கும்பெயர். சலாகையென்பது, தெய்வசயனம்-சலாகைப்பாட்டுக்கும்பெயர். விலோகமென்பது, கூந்தல்-பொருங்கொடிக்கும்பெயர் விடமென்பது, நஞ்சு தேளுக்கும்பெயர்-எ-று. (௯௪)

செல்லிடியேவனமேகந் தெகிலையுமாகுமென்ப
எல்லொளிபகலிகழ்ச்சி யிரவுடனிரவியும்பேர்
சொல்லுமாறிகழ்நெல்லாந் தொடுத்தலைவளைத்தல்பற்றல்
கல்லொலிமலைகல்லென்ப கரண்டநீர்க்காக்கை செப்பாம்

(இ-ள்) செல்லென்பது இடி-செல்லென்னேவல்-மேகம்-கறையானுக்கும்பெயர். எல்லென்பது, பிரகாசம்-பகல்-இகழ்ச்சி-இராத்திரி-சூரியனுக்கும்பெயர்-சொல்லென்பது. வார்த்தை-புகழ்-நெல்லுக்கும்பெயர். தொடுத்தலென்பது, வளைத்தல் பற்றலுக்கும்பெயர். கல்லென்பது, சத்தம்-மலை கல்லுக்கும்பெயர். கரண்டமென்பது, நீர்க்காக்கை-செப்புக்கும்பெயர்-எ-று.

கலிவஞ்சமொலியேவாரி கடையுகம்வலிமையம்பேரோ
சிலையெனமலைகல்வில்லாகு செடியொளிசெறிபுதீநாமம்
தலமெனபதிலைபுவிப்பேர் தலையிடந்தலைவிண்ணுச்சி
திலமேமஞ்சாடியெள்ளாந் திலகமஞ்சாடிபொட்டாம்

(இ-ள்) கலியென்பது, வஞ்சனை-சத்தம்-கடல்-கடையுகம்-வலிமைக்கும்பெயர். சிலையென்பது, சத்தம்-மலை-கல்-வில்லுக்கும்பெயர்-செடியென்பது, பிரகாச-நெருக்கம்-தீமைக்கும்பெயர். தலமென்பது, இலை பூமிக்கும்பெயர், தலையென்பது, இடம்-சிரசு-ஆகாயம்-முதலுக்கும்பெயர், திலமெ

அ

RangaRakes tamilnavarasam.com

ன்பது, மஞ்சாடிமரம்-யெள்ளுக்கும்பெயர். திலகமென்பது,மஞ்சாடிமரம் திலதத்துக்கும்பெயர்-எ-று. (௰௬)

வல்லைகான்விரைவுமைந்தாம் வடமணிவடமாறும்பு
பல்லமோர்கணக்குப்பாணம் பல்லணங்கீரடிநாற்பேர்
மல்லலேவலிவளம்போ வாயிலைம்புலன்கபாடம்
முல்லைமல்லிகையேவென்றி முல்லைநன்னிலங்கற்பாமே

(இ-ள்) வல்லையென்பது, காடு-காலவிரைவு - வலிமைக்கும்பெயர். வடமென்பது-மணிவடம்- கயிறுக்கும்பெயர் பல்லமென்பது, ஓரெண்- அம்பு - குதிரைக்கல்லணை- கரடிக்கும்பெயர். மல்லலென்பது, வலிமை- வளமைக்கும்பெயர், வாயிலென்பது, ஐம்புலன்-கதவுக்கும்பெயர். முல்லையென்பது,வனமல்லிகை - வெற்றி-முல்லைநிலமகற்புக்கும்பெயர்-எ-று. ( )

கோலென்பதீட்டிவாட்கோ றுகிலிகைதுலாஞ்சம்மட்டி
சீலமன்னவன்றனசெங்கோ றிரட்டியாழ்நரம்போடம்பு
நீலவஞ்சனக்கோலோடு நீளிலந்தையும்பன்னோரோபோ
காலிலியருணன்பாம்பு காற்றொடுமுப்பேராமே

(இ-ள்) கோலென்பது, ஈட்டி வாட்கோல்-எழுதுகோல தராசு-குதிரைச்சம்மட்டி-செங்கோல-திரண்டவடிவு - யாழினரம்பு - பாணம்-மையெழுதுகோல-இலந்தைமரத்திற்கும்பெயர் காலிலியென்பது,சூரியன்தேர்ப்பாகன்-பாம்பு - காற்றுக்கும்பெயர்-எ-று. (௰அ)

கூலமேபண்ணிகாரம் புனற்கரைகோவிலங்கின்
வாலொடாவணமேபாகல் வரம்பொடுகுரங்கெண்பேரோ
காவிடமரக்கால்பிள்ளை குறுந்தறிவனங்காம்பூற்றங்
காலனங்குரங்கலவாயக்கால் காற்றுத்தேருருள்பன்மூன்றே

(இ-ள்.) கூலமென்பது, பலபண்டம்-நீர்க்கரை-பசு- மிருகத்தினவால்-கடைவீதி-பாகல்-சிறுவரம்பு - குரங்குக்கும்பெயர். காலென்பது, இடம்-மரக்கால-புத்திரன் - குறுந்தறி - காடு - மலர்க்காம்பு-பற்றுக்கோல-காலன மூலை - பாதம - வாய்க்கால - காற்று-தேருருளைக்கும்பெயர்-எ-று. (௰௯)

கோலமேயழகுபன்றி பாக்குநீர்க்கொழுந்துபீர்க்காம்
மாலியேயிரவிகள்ளா மாந்தலேமரித்தலுண்டல்
வேலயில்படைக்கலப்பேர் வேதண்டங்கைலைவெற்பாம்
சாலிநெற்பொதுவுங்கள்ளு மருந்ததிதானுமாமே

(இ-ள்) கோலமென்பது, அழகு-பன்றி-பாக்கு-நீரோட்டம் - பீர்க்குக்கும்பெயர். மாலியென்பது, சூரியன் கள்ளுக்கும்பெயர். மாந்தலென்பது, சாதம்-உண்டலுக்கும்பெயர், வேலென்பது, வேலாயுதம- ஆயுதபொதுவிற்கும்பெயர். வேதண்டமென்பது, வெள்ளிமலை-மலைக்கும்பெயர், சாலியென்பது, நெற்பொதுகள் - அருந்ததிக்கும்பெயர்-எ-று. (உ௦)

RangaRakes tamilnavarasam.com

உலவைகான் மரத்தின் கொம்போ டுறுதழை விலங்கின் கோடாம்
மலைதலே பொரல் கடற்போ மந்திரி குபேரன் வெள்ளி
அலர் பழி விரிபூ நீராம் அவிர்தலே யொளி வீறற்பேர்
எலி பூரநாளெலிப்போ இரணம் பொன் கடன் மாணிக்கம்

(இ-ள்) உலவையென்பது, காற்று - மரக்கொம்பு - தழை - மிருகத்தின் கொம்புக்கும் பெயர், மலைதலென்பது, பொருதல் - அணிதலுக்கும் பெயர், மந்திரியென்பது, குபேரன் - சுக்கிரனுக்கும் பெயர். அலரென்பது, பழிச்சொல் - மலர்ந்தபூ - நீருக்கும் பெயர், அவிர்தலென்பது, ஒளிசெய்தல் - வீறலுக்கும் பெயர். எலியென்பது, பூரநட்சத்திரம் - எலிக்கும் பெயர், இரணமென்பது, பொன் - கடன் - மாணிக்கத்திற்கும் பெயர் - எ-று. ௨௧

ஆலயநகரங்கோவில் லானையின் கூடம் போம்
பாலமே மழுநெறிப்போ பவித்திரஞ் சுசிதருப்பை
நூலோர் மந்திரிகள் பார்ப்பார் நுவல் கவிப்புலவர்க்குப் பேர்
வேலாவலயந்தான் பூமி விரிகடலிருபேராமே

(இ-ள்) ஆலயமென்பது, நகரம் - தேவாலயம் - யானைநிற்குங்கூடத்திற்கும் பெயர், பாலமென்பது. மழுப்படை - நெறிக்கும் பெயர். பவித்திரமென்பது, தூய்மை - தருப்பைக்கும் பெயர், நூலோரென்பது, மந்திரிகள் - பிராமணர் - புலவருக்கும் பெயர், வேலாவலயமென்பது, பூமி - கடலுக்கும் பெயர் - எ-று. ௨௨

சூலியே கருப்பப்பெண்ணுந் துர்க்கையுஞ் சிவனு மூப்பேர்
வாலியே யலாயுதனிட் கிந்தையின் மன்னன் பேராம்
பாலபுடையியல் புதிக்கு பகுத்தல் பாலென்னு மைம்பேர்
ஏலமே மயிர்ச்சாந்தோடே யேலந்தினவிகற்புமாமே

(இ-ள்) சூலியென்பது, கருப்பவதி - துர்க்கை - சிவனுக்கும் பெயர், வாலியென்பது, பலதேவன் - கிட்கிந்தைமன்னனுக்கும் பெயர். பாலென்பது, பக்கம் - குணம் - திசை - பங்கு - பாலுக்கும் பெயர் ஏலமென்பது மயிர்ச்சாந்து - ஏலத்தின் வேறுபாட்டிற்கும் பெயர் - எ-று. ௨௭

லகரவெதுகை - முற்றிற்று.

## வகரவெதுகை.

நவமென்பது புதுமை கேண்மை யொன்பது நற்கார்க்காலம்
கவனமே கலக்கம் வெம்மை குதிரையின் கதிபோர்க்காடாம்
உவணமே கலுழனுக்கு முயர்ச்சிக்குங் கழுகுக்கும் பேர்
புவனமே யிராசி பூமி படர்காற்று மனையே கோவில்

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) நவமென்பது, புதுமை-நட்பு - ஒன்பது - மழைக்காலத்திற்கும்பெயர். கவனமென்பது, கலக்கம்-வெப்பம்-குதிரை - நடை-யுத்தம்-காடுக்கும்பெயர். உவணமென்பது, கருடன்-உயரம் - கழுகிறகும்பெயர், புவனமென்பது, இராசிப்பொது - பூமி- காற்று - வீடு-அரசனிவைகளுக்கும்பெயர் எ-று, (க)

புவனநீர் புவியுமாகும் புரத்தலே காத்தல்வண்மை
நவனைநா லாறுமைம்பின்னடி நூலேசாத்திரமுந் தானும்
தவவெனமிகுதிகுன்றல் தந்தேநூல்சாத்திரப்பேர்
சிவநன்மைகுறுணிமுத்தி சிவனேயுயிர்வியாழம்

(இ-ள்) புவனமென்பது, நீர்-பூமிக்குப் பெயர், புரத்தலென்பது, காத்தல்-கொடுத்தலுக்கும்பெயர், நவனையென்பது, கலவி-நால்-நுட்பம்-இவையாவிற்கும்பெயர், நூலென்பது, சாத்திரம் - பஞ்சிநூலுக்கும்பெயர், தவவென்பது, மிகுதி-குன்றலுக்கும்பெயர், தந்திரமென்பது, பட்டுநூல் . சாத்திரத்துக்கும்பெயர், சிவமென்பது, நன்மை-குறுணி - மோட்சத்திற்கும் பெயர்-எ-று. ௨

இவறலேமறதியாசை யென்பபேரிசைக்கும்பேர்
இவாதலேயெழுச்சியாசை யேறுதல்சேறல்மேவல்
சுவவெனப்புள்ளின்மூக்குரு சுவர்க்கமுஞ்சுண்டுமாம்பேர்
குவவெனத்திரட்சிமற்றுங் குவிதலேபெருமைக்கும்பேர்

(இ-ள்) இவறலென்பது, மறதி ஆசை-பேரிசைக்கும்பெயர். இவாதலென்பது, எழுச்சி- ஆசை-ஏறுதல்-செல்லல்-மேவுதலுக்கும்பெயர், சுவவென்பது, பறவைமூக்கு - தேவலோகம் - மூஞ்சூறுக்கும்பெயர், குவவென்பது, திரண்டவடிவு - குவிதல் - பெருமைக்கும்பெயர் எ-று- ௩

தவிசென்பதடுக்குமெத்தை யிலகடாமும்போசானே
சவிமணிக்கோவைசெவ்வி சாற்றியவனப்புகாந்தி
நவிரமேமஞ்ஞைபுன்மை நன்மலையுடனேயுச்சி
நவிலல்சொல்லுதல்பண்ணலாம்பேர் நவியமேமழுக்கோடாலி

(இ-ள்) தவிசென்பது, தடுக்குமெத்தை - யானைமேற்றவிசுக்கும்பெயர், சவியென்பது, மணிக்கோவை - செவ்வை - அழகு - ஒளிக்கும்பெயர், நவிரமென்பது, மயில் - புன்மை-மலை-உச்சந்தலைக்கும்பெயர், நவிலலென்பது சொல்லல் - செய்தலுக்கும்பெயர், நவியமென்பது, மழுப்படை - கோடாலிக்கும்பெயர்-எ-று, ௪

கவுசிகம்விளக்குத்தண்டேர் பண்பட்டுக்கடியகோட்டான்
சவுரியேதிருமால்கள்வன் சனியமனிவையாம்பேர்
மவுலியேமுடிகோடீரம் வட்கலென்பதுநாண்கேடாம்
கவலைசெந்தினையோர்வல்லி கவர்வழிதுன்பநாற்பேர்

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) கவுசிகமென்பது, விளக்குத்தண்டு-ஓர்பண்-பட்டுச்சீலை-கோட்டானுக்கும்பெயர், சவுரியென்பது,திருமால்-களவன்-சனி - இயமனுக்கும்பெயர்,மவுலியென்பது,கிரீடம்-சடைக்கும்பெயர், வட்கலென்பது-நாணங்கெடுதலுக்கும்பெயர்,கவலையென்பது,கவட்டுக்கொடி-கவர்வழி- துன்பத்துக்கும்பெயர்-எ-று, (௫)

சேவகம்வீரம்யானைத்துயிலிடந்துயிலுஞ்செப்பும்
சீவனியோர்மருந்துசெவ்வழித்திறத்தோர்ராகை
யாவணம்புனர்தம்வீதியங்காடியுரிமைநாற்பேர்
நீவியேதுடைத்தலாடை நெருங்குகொய்சகமும்பேரே

(இ-ள்) சேவகமென்பது. வீரம் - யானைத்துயிலிடம் - நித்திரைக்கும்பெயர், சீவனியென்பது, ஓர்மருந்துசெவ்வழித்திறத்திறனுக்கும்பெயர், ஆவணமென்பது,புனர்பூசநட்சத்திரம்-தெரு-கடைவீதி- உரிமைக்கும்பெயர்-நீவியென்பது,துடைத்தல்-வஸ்திரம்- கொய்சகத்திறகும்பெயர்-எ-று,

உவளகமதிலோர்பக்கமுருணிபள்ளமுள்ளில்
கவடெனப்பகப்பியானைக்கழுத்திடுபாசைக்கும்பேர்
சிலையுமைமரமேவாகொல்லனுலைமுகந்திரிபுமோரி
கலையேயாயிலியநாட்கோவழியெனளிளங்காய்

(இ-ள்,) உவளகமென்பது, மதில் ஓர்பக்கம்-குளம்-பள்ளம்-அந்தப்புரத்திறகும்பெயர், கவடென்பது, மரக்கொம்பு-யானைக்கழுத்திற்கட்டுங் கயிறுக்கும்பெயர். சிலையென்பது,பார்வதி-மரமேவாக்கொல்லனுலைமுகந்திரிக்கும்பெயர்-கலையென்பது ஆயிலியநட்சத்திரம்-கோல் கவ்வழி எளிளங்காய்க்கும்பெயர்-எ-று. (௭)

சிவப்பெனச்சினமுஞ்செம்மையுடன்சினக்குறிப்புமுப்பேர்
உவப்பெனமகிழ்ச்சிமேடாமொழுக்கமேவழியாசாரம்
தெவிட்டலேயடைத்தல்காணறணிறைதலுமொலியுஞ்செப்பும்
துவக்கேதோல்பிணக்கிரண்டாஞ்சூழலேயிடம்விசாரம்

(இ-ள்) சிவப்பென்பது.கோபம்-சிவப்பு-கோபக்குறிப்புக்கும்பெயர்,உவப்பென்பது. களிப்பு-மேட்டுக்கும்பெயர்-ஒழுக்கமென்பது-வழி-ஒழுக்கத்திறகும்பெயர், தெவிட்டலென்பது, அடைத்தல்-உமிழ்தல்-நிறைதல்-சத்தத்திறகும்பெயர், துவக்கென்பது,தோல்-பிணக்குக்கும்பெயர், சூழலென்பது,இடம்-ஆராய்தலுக்கும்பெயர்-எ-று (௮)

சேவலேகாவலோடுசேறுபுள்ளாண்முப்பேரே
கேவலந்தனிமைமுத்திக்கிரமனென்பதுபாலகிளை
பூவைசாரிகைகாயாவாம்புலிசிங்கமுழுவைசாங்கே
வாவலேதாருஞ்சிறைபுள்ளுஞ்சாவலுமலக்கலாமே

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) சேவலென்பது, கால்-சேறு-மயிலொழிந்தபறவை யாணுக்கும் பெயர், கேவலமென்பது, தனிமை-மோட்சத்திறகும்பெயர், கீரமென்பது, பால்-கிளிக்கும்பெயர், குவையென்பது, நாசணவாய்ப்புள்- காயாமரத்திற்கும்பெயர், புலியென்பது, சிங்கம்-புலி-நால்வகைச்சாதிலொன்றுக்கும்பெயர், வாவலென்பது, வெளவால்-தணடலுக்கும்பெயர்-எ-று. (௯)

சுவல்பிடர்தோண்மேன்மேடு துரகதக்குசைநாற்பேரே
கவிமந்திபுலவன்சுக்கன்கழியென்பமிகுதிகாய
நவிரேயாண்மயிர்பண்வாளாநாஞ்சிலெந்திரங்கலப்பை
கவிகையேகுடைகொடையபோகடிப்பங்காதணிப்புண்செப்பாம்

(இ-ள்) சுவலென்பது, பிடரி-தோண்மேல்-மேடு-குதிரைமயிருக்கும்பெயர். கவியென்பது, குரங்கு-புலவன்-சுக்கிரனுக்கும்பெயர், கழியென்பது, மிகுதி-கழிக்கும்பெயர், நவிரென்பது, ஆணமயிர்-மருதயாழ்த்திறம்-வாளுக்கும்பெயர், நாஞ்சிலென்பது, மதிலுறுப்பு-கலப்பைக்கும்பெயர். கவிகையென்பது, குடை-கொடைக்கும்பெயர்-கடிப்பமென்பது, காதணி- ஆபரணச்செப்புக்கும்பெயர்-எ-று. (௰)

மாவண்டுபெருமைபிண்டிவாசிகூப்பிடல்வெறுத்தல்
காவுறுவிலங்குசெல்வங்கருநிறங்கமலைபத்தாம
கோவிழிபசுநீர்திக்குக்குலிசமவிண்கிரணம்பூமி
ஏவிளாசுவர்க்கமவேந்தனிரங்கல்வெற்பீரேமாமே

(இ-ள்) மாவென்பது, வண்டு - பெருமை - நெனமா - குதிரை- அழைத்தல்-வெறுப்பு - விலங்கினபொது - செல்வம - கருநிறம் - திருமகளுக்கும்பெயர், கோவெனபது, கண் - பசு - நீர - திசை - வச்சிராயுதம்-ஆகாயம்-கிரணம-பூமி-அம்பு-சொல-தேவலோகம-அரசன-இரங்கல்-மலைக்கும் பெயர்-எ-று. (௰௧)

ஆவியேவாவிநாற்றமாருயிர்புகைமூச்சைம்பேர்
கூவிரந்தேர்தேர்மொட்டாங்குவடுநீண்மலைவெற்புச்சி
காவியேகுவளைகாவிக்கல்லொடுகள்ளுமூப்போ
ஙாவிகன்மஞ்சிகன்கார்த்திகைபூரநாளுமாமே

(இ-ள்) ஆவியென்பது, குளம்-வாசனை-உயிர்புகை-உயிர்ப்புக்கும்பெயர் கூவிரமெனபது, தேர்-தேர்கொடிஞ்சிக்கும்பெயர், குவடென்பது, மலைமலையுச்சிக்கும்பெயர். காவியென்பது, கருங்குவளை-காவிக்கல்- கள்ளுக்கும் பெயர், நாவிதனென்பது, அம்மட்டன-கார்த்திகைநட்சத்திரம்- பூரநட்சத்திரத்துக்கும்பெயர்-எ-று (௰௨)

ஆவென்பதிரக்கம்பெற்றநாச்சாவோடிசைவியப்பாம்
காவென்பதுலாம்பூஞ்சோலைகாத்தலோட்சுமைநாற்பேரே

RangaRakes tamilnavarasam.com

பாவென்பனுவனூற்பாபரவுதல்பரப்புமாகும்
தாவெனப்பகைவருத்தந்தாண்டுதல்வலிகேடப்பேர்

(இ-ள்.) ஆவென்பது, இரக்கம்-பசு-ஆச்சாமரம்-இசை- அதிசயத்திற்கும்பெயர், காவென்பது, துலை-சோலை-இரட்சித்தல்- தோட்சுமைக்கும்பெயர், பாவென்பது, பஞ்சிநூல்-வெண்பாமுதலியபா பரவுதல்- பரப்புக்கும்பெயர், தாவென்பது, பகை- துன்பம்-தாண்டுதல்-வலிமை- கெடுதலுக்கும்பெயர்-எ-று. (௧௩)

கவ்வையேபழிச்சொற்றுன்பங்களோசையெள்ளிளங்காய்
பவ்வமேகுமிழிவாரிபருமரக்கணுவுமாவாம்
தவ்வைமுன்பிறந்தாளோடுதாயுமூதேவியும்பேர்
நவ்வியேதோணிமானாநன்றெனப்பெருமைநன்மை

(இ-ள்) கவ்வையென்பது,பழிச்சொல்-வருத்தம்-களி-சத்தம்-எள்ளிளங்காய்க்கும்பெயர், பவ்வமென்பது, நீர்க்குமிழி-கடல்- மரக்கணுவு - பௌரணிக்கும்பெயர், தவ்வையென்பது,அக்காள்-தாய் - மூதேவிக்கும்பெயர், நவ்வியென்பது, தோணி-மானுக்கும்பெயர், நன்றென்பது,பெருமை நன்மைக்கும்பெயர்-எ-று. (௧௪)

அவலேசிற்றுண்டிபள்ளநீர்நிலையாகும்பேர்
செவிலியேவளர்த்தகைத்தாய்முன்பிறந்தவளுஞ்செப்பும்
கவுடமோர்கொடியோர்தேசமிருபெயர்கழறலாமே
சுவடுவச்சிராங்கியோடொண்சுபமென்பதழகுவெண்மை

(இ-ள்)அவலென்பது,சிற்றுண்டி-பள்ளம்-குளத்திற்கும்பெயர், செவிலியென்பது,செவிலித்தாய்-அக்காளுக்கும்பெயர், கவுடமென்பது, ஓர்கொடி- ஓர்தேசத்துக்கும்பெயர் சுவடென்பது- வச்சிராங்கி ஓரெலிகத்துக்கும்பெயர், சுபமென்பது, அழகு- வெண்மைக்கும்பெயர்-எ-று, (௧௫)

பவமெனப்பசனனம்பாவம்பாவகந்தானவினைதியானம்
சவுரியங்களவுவீரமதண்மைதான்குளிர்ச்சிதாழ்வு
அவமொருதானியப்பேரொன்பநெல்விறகும்பேர்
யவனர்சோனகர்கண்ணாளர்சித்திரகாரரெனப

(இ-ள்) பவமென்பது, பிறப்பு-பாவத்திற்கும்பெயர்,பாவமென்பது,தீவினை-தியானத்திற்கும்பெயர், சவுரியமென்பது,களவு- வீரத்திற்கும்பெயர், தண்மையென்பது, குளிர்ச்சி-தாழ்விற்கும்பெயர்,அவமென்பது;ஓர் [illegible] கோதுமைநெல்விற்கும்பெயர்,யவனரென்பதுசோனகர்-கம்மாளர்-சித்திரகாரருக்கும்பெயர்-எ-று. (௧௬)

ஆவரணந்தான்சட்டைதடைமறைவரணமாடை
ஏவலேயங்கோளென்பவெய்தியவறுமைக்கும்பேர்
ஓவியர்சிறப்புநூலோரொடுசித்திரகாரரும்பேர்
ஓவிரக்கச்சொன்னீக்கமோடுநீர்தகைப்பாட்டம்

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) ஆவரணமென்பது, சட்டை-தடுத்தல்-மறைவு-கோட்டை-வஸ்திரத்திற்கும்பெயர், ஏவலென்பது, வியங்கோள்-தரித்திரத்துக்கும்பெயர். ஓவியனென்பது, சிற்பாசாரியர்-சித்திரகாரர்க்கும்பெயர், ஓவென்பது, இரக்கச்சொல்-நீங்குதல்-மடையடைக்குங்கதவிற்கும்பெயர்-எ-று. (௰எ)

அவ்வையேதாயின் பேருமவ்வைமூதாட்டிப்பேராமே
செவ்வியேயாம்பொழுதிஞ்செப்பியபருவமாகும்
தெவ்வியாபகையிரண்டாந்தீவினைகொடுமைபாவம்
சைவமோர்புராணஞ்சிவசமயத்தின்விகற்பமாமே

(இ-ள்.) அவ்வையென்பது, தாய்-அவ்வையார்க்கும்பெயர், செவ்வியென்பது அழகு-காலம்-பருவத்திற்கும்பெயர்-தெவ்வென்பது யுத்தம்-பகைக்கும் பெயர், தீவினையென்பது, கொடுமை-பாவத்திற்கும்பெயர், சைவமென்பது. ஓர்புராணம்-சிவசமயத்தின்-வேறுபாட்டிற்கும்பெயர்-எ-று. ௰அ

வகரவெதுகை-முற்றிற்று.

—*—

## ழகரவெதுகை.

விழவெனமிதுனராசிவிளங்குமுற்சவமுமாகும்
கழையெனப்புனர்பூசமூங்கில்கழையென விரும்பும்போ
கழல்கழங்கொடுசெருப்புக்காலணிகாலெனற்போ
இழமைமுப்புரிமைபண்பாங்கிழிகிழிப்பொத்திகீறலுமே

(இ-ள்.) விழவென்பது, மிதுனராசி-திருவிழாவிற்கும்பெயர், கழையென்பது, புனர்பூசநட்சத்திரம்-மூங்கில்-கருப்புக்கும்பெயர், கழலென்பது, கழற்காய்-செருப்பு-காலணி-காலுக்கும்பெயர், பழமையென்பது, புதுமை-உரிமை-குணத்திற்கும்பெயர், கிழியென்பது, கிழிப்பு-கீறலுக்கும்பெயர். க

சூழியேசுனையுமவெம்பதுமபியின் முகபடாமும்
பாழியேவலிவிலங்கின் படுக்கையூர்பற்றிலோருர்
நாழியேயளக்குநாழி நாழிகைபூரட்டாதி
ஆழிமோதிரமேநேமி யலைகடலகரையேவட்டம்

(இ-ள்.) சூழியென்பது-சுனை-யானை-முகபடாத்திற்கும்பெயர், பாழியென்பது, வலிமை-மிருகத்தின்படுக்கை-ஊர்-பகைவருக்கும்பெயர், நாழியென்பது, அளக்குநாழி-நாழிகை-பூரட்டாதி-நட்சத்திரத்திற்கும்பெயர், ஆழியென்பது-மோதிரம்-சக்கராயுதம், கடல் கடற்கரை-வட்டவடிவிற்கும்பெயர்-எ-று. உ

இழுமெனலோசையென்ப வினிமையுமியம்புமப்போ
விழுமமேசிறப்புச்சீர்மை யிடும்பையுமவித்தபேரோ

RangaRakes tamilnavarasam.com

தொழுவென்பதுழலைதானே பிரோவதிநாளுஞ்சொல்லும்
செழுமையேவளமைகொழுப்பாந் தேனெனப்பறவும்வண்டும்

(இ-ள்) இழுமெனபது, அனுகரணவோசை - இனிமைக்கும்பெயர்-விழுப்பமெனபது, சிறப்பு சீர்மை - இரண்டிற்கும்பெயர், தொழுவென்பது. தொழுமகம - இரேவதிநட்சத்திரத்திற்கும்பெயர்- செழுமையெனபது - வளமை - கொழுப்புக்கும்பெயர், தேனெனபது, கள்- வண்டிற்கும பெயர்-எ-று. ௩

கழுதுபேய்பரண்வண்டெனப கயவுகீழ்பெருமைமேன்மை
யழுவமேபரப்புநாடு வழுங்கலேயிரங்கல்கேடாம்
கழுமல்பற்றிருமயக்கங் காதலேயாசைகோறல்
கழிதலெனபவேசாதல் கடத்திடனமிகுதிமுப்போ

(இ-ள்) கழுதென்பது, பிசாசம்-பரண்-வண்டிற்கும்பெயர், கயவென்பது கீழ்மை-பெருமை-மேன்மைக்கும்பெயர்- அழுவமெனபது பரப்பு-நாட்டிற்கும்பெயர்-அழுங்கலெனபது, இரங்கல்-கேட்டிற்கும்பெயர். கழுமலெனபது, பற்றுதல்-மயக்கத்திற்கும்பெயர், காதலெனபது, ஆசை- சொல்லுதலுக்கும்பெயர், கழிதலெனபது, சாதல்-கடத்தல்-மிகுதிக்கும்பெயர்-எ-று. ௪

மாழைபொன்னுலகக்கட்டி மடமையோப்புளிமாவோலை
கூழையேசிறகுமாதர் கூந்தலைவொப்படையுறுப்பாந்
தாழைதெங்கைக்குமாகுஞ் சாகினிசேம்புகீரை
ஊழ்முறைவெயில்பகைப்பேர் ஊசியேகூரியாணி

(இ-ள்) மாழையெனபது-பொன்-உலோகக்கட்டி-அறிவின்மை - அழகு-புளிமா-ஓலைக்கும்பெயர், கூழையெனபது, சிறகு-பெண்மயிர்- படையுறுப்புக்கும்பெயர், தாழையெனபது, தாழை - தென்னமரத்திற்கும்பெயர். சாகினியெனபது, சேம்பு-சிறுகீரைக்கும்பெயர். ஊழெனபது,முறைமை வெயில்-பகைக்கும்பெயர், ஊசியெனபது, இழைவாங்கி-எழுத்தாணிக்கும் பெயர்-எ-று. ௫

உழையெனபஇடமான்யாழின் ஞரம்பிற்கும்பேராங்
குழையெனபதளிர்துவாரங் குண்டலஞ்சேறுநாற்பேர்
விழைவெனப்புணர்ச்சிகாதல் வெறுக்கையென்பதுபொன்செல்வம்
வழிமரபிடம்பின்னாக்கம் வழங்கலேகொடையுலாவல்

(இ-ள்) உழையென்பது, இடம்-மான்-யாழின்ஞரம்பிற்கும்பெயர், குழையெனபது, தளிர் - துளையுடைப்பொருள் - குண்டலம்- சேற்றிற்கும்பெயர், விழைவெனபது, புணர்தல் - ஆசைக்கும்பெயர், வெறுக்கையெனபது, பொன் - செல்வத்துக்கும்பெயர், வழியெனபது, பழமை - இடம் - பின்வழிக்கும்பெயர், வழங்கலென்பது. கொடுத்தல்-உலாவுதலுக்கும்பெயர்-எ-று. ௬

RangaRakes tamilnavarasam.com

ஈழம்பொன் கள்ளோர்தேச மெல்லையேயளவைவெய்யோன்
மேழகங்கவசமாடாம் வேளாண்மைகொடையேமெய்ம்மை
காழியாவண்ணாருப்பு வாணிகரிருபோகாட்டும்
வேழமேகரும்பியானை கொறுக்கச்சிவேணுநாற்பேர்

(இ-ள்) ஈழமென்பது, பொன்-கள்-சிங்களதேசத்திற்கும்பெயர். எல்லையென்பது, அளவு-சூரியனுக்கும்பெயர், மேழகமென்பது-கவசம்- ஆட்டிற்கும்பெயர், வேளாண்மையென்பது-கொடுத்தல்-உண்மைக்கும்பெயர், காழியென்பது-வண்ணாருப்பு-வாணிகருக்கும்பெயர், வேழமென்பது. கரும்பு-யானை-கொறுக்கை-மூங்கிலுக்கும்பெயர்-எ-று, ௭

கூழென்பதுணவும்பொன்னும் பயிரொன்றுங்கூறுமுப்பேர்
காழென்பமணியின்கோவை கற்பரல்சேகுவித்தாம்
யாழென்பமிதுனவீணை யிரலைநாளாதிரைப்பேர்
கீழென்பதிடங்கீழ்சாதி கீழ்த்திசைக்கயமைநாற்பேர்

(இ-ள்) கூழென்பது, உணவு-பொன்-பயிருக்கும்பெயர். காழென்பது, மணிக்கோவை-பருக்கைக்கல்-மரவயிரம்-விதைக்கும்பெயர், யாழென்பது, மிதுனவிராசி-வீணை அச்சுவினிநட்சத்திரம்-திருவாதிரைநட்சத்திரத்திற்கும்பெயர், கீழென்பது. இடம்-ஈனசாதி-கிழக்கு- கீழ்மைக்கும்பெயர்.

கோழியேயுறையூராங் குய்யமேமறைவுயோனி
மூழியேவாவிசோறு டகப்பையுமொழியுமுப்பேர்
மூழையேயகப்பைசோறு முறஞ்சுளகொடுவிசாக
நூழிலேகோறலியானை நுண்கொடிகொடிக்கொத்தான்பேர்

(இ-ள்) கோழியென்பது- கோழி - உறையூருக்கும்பெயர் - குய்யமென்பது, மறைவு - பெண்குறிக்கும்பெயர், மூழையென்பது, குளம் -சோறு- அகப்பைக்கும்பெயர் - மூழையென்பது, அகப்பை - சோற்றுக்கும்பெயர்- முறமென்பது-முறம்-விசாகநட்சத்திரத்துக்கும்பெயர், நூழிலென்பது ,கொல்லல்-யானை - படர்கொடி - கொடிக் கொத்தானுக்கும் பெயர்-எ-று. ௯

தொழுதிபுள்ளொலிகூட்டப்பேர் தொழுவினையடிமைகூட்டம்
கெழுவுதன்மயக்கம்பற்றுங் கீலாலங்களாநீர்காடி
குழறுளையுடைப்பொருளும்பண் மயிரிசைக்குழன்முப்பேரோ
அழிவென்பவீதல்கேடாம் அவிநெய்சோறமராருண்டி

(இ-ள்) தொழுதியென்பது, பறவையினொலி - கூட்டத்திற்கும்பெயர், தொழுவென்பது-பசுக்கூட்டம்-அடிமை-கூட்டத்திற்கும்பெயர்-கெழுவுதலென்பது, மயக்கம்-பற்றுக்கும்பெயர்-கீலாலமென்பது-இரத்தம்-நீர்-காடி-

RangaRakes tamilnavarasam.com

க்கும்பெயர்-குழலென்பது,உட்டுளைப்பொருள்-கூந்தல்-வேய்ங்குழலுக்கு
ம்பெயர், அழிவென்பது,சாதல் கேட்டிறகும்பெயர், அவியென்பது, நெய்
சோறு-தேவருணவிற்கும்பெயர்-எ-று, ௰

ழகரவெதுகை - முற்றிற்று.

—*—

# ளகரவெதுகை.

(❊)

குளநுதல்கரும்பினகட்டி குட்டமூமிட்டநாமம
களமமாககளமேகணடங களாவிடஙகறுப்பேயில்லாள்
வளமைமாட்சிமைகொழுப்பாம வாருணஙகடலுமேறகும்
விளமெனபகமாவிளாவாம விமமலேஙகுதலொலிததல்

(இ-ள்) குளமெனபது,நெற்றி-வெலலம-குளத்திறகும்பெயர், களமென்
பது,போாககளம-மிடறு-களாசசெடி-நஞ்சு-கறுப்பு-மனைக்குமபெயர், வ
ளமையெனபது,மாட்சிமை-கொழுப்புக்குமபெயர் வாருணமெனபது,கட
ல்-மேறகுககுமபெயர்,விளவெனபது,விலப்பிளப்பு-விளாமரத்திறகுமபெயர்
விமமலெனபது,அழுதல-ஒலிததலுக்குமபெயர்-எ-று. ௧

முளரியேவிறகுசெந்தீ மூண்ட கஞ்சிறுமைகாடாம்
விளவொன்பதிளைமைதானே வெளுப்பொடுகொழுப்புமாகும்
களபமேயானைககனறு கமழசாநதுகலவைமுபபோ
உளாதலேசிந்தறலாகும் வட லுமுனைககறபாறறே

(இ-ள்) முளரியென்பது.விறகு-நெருப்பு-தாமரை-நுண்மை- காட்டிறகு
மபெயர்,விளவொன்பது,இளைமை-வெண்மை.கொழுப்புக்குமபெயர், களப
மெனபது,யானைககன்று-சாநது-கலவைககுமபெயர்,உளாதலெனபது,சிந்
தல்-தடவலுககுமபெயர்-எ-று. ௨

குளிரமழுநண்டிருத்தல் குளிர்கவண்முழாமீன்முளை
நளிர்குளிர்பெருமைஞெண்டு நாடியசெறிவுநாற்பேர்
ஒளிவட்டந்தான்கண்ணாடி சக்கரமிருபேரோதும்
மிளியிசையிசிததலெல்லே யிணங்குதலுரிததற்கும்பேர்

(இ-ள்) குளிரென்பது-மழுப்படை-நண்டு-தவகள்-குளிர்ச்சி-கவண்- கு
டமுழா-மீனெழுங்கிற்கும்பெயர்,நளிரெனபது,குளிர்ச்சி-பெருமை- நண்
டு-நெருக்கத்திறகுமபெயர்,ஒளிவட்டமென்பது,கண்ணாடி- சக்கராயுதத்தி
ற்கும்பெயர், இளியென்பது,ஏழிசையினொன்று-இசிததல்- இகழ்ச்சிக்குறி
ப்பு-இணஙகுதல்-உரிதலுககுமபெயர்-எ-று ௩

பளிதமென்பதுகாபபூரம பலலமென்கணக்குமாகும்
வெளிலணிலவேழத்தமபம் வெண்டயிாகடைதறிபபேர்

RangaRakes tamilnavarasam.com

களிறெனப்படுந்தேனாளே கறையடிசுறவுப்பன்றி
யொளியிருசுடரேதீயே யெகளிப்பிடம்புகழுமாமே,

(இ-ள்) பளிதமென்பது, கர்ப்பூரம்-பலமெனுமோரெண்ணிற்கும்பெயர். வெளிலென்பது, அணில்-யானைத்தறி-சயிர்க்கடைதறிக்கும்பெயர். களிறென்பது, அத்தரிட்சத்திரம்-யானை-சுறா-பன்றிக்கும்பெயர். ஒளியென்பது சூரியசந்திரர்-நெருப்பு-ஒளிப்பிடம்-பிரபுக்கும்பெயர்-எ-று.

பாளிதஞ்சோறுகண்டசருக்கரைகுழம்புபட்டா
மோளியேயானைக்கூட்டமொழுங்கெனறுமவழங்குநாலே
கோளிதானமரமேயத்திகொளவோனுங்குகாழுச்சிமபோ
மீளிதிண்ணியனவலிப்போமேனமகண்பெருமைக்குமபோ

(இ-ள்) பாளிதமென்பது, சோறு-கண்டசருக்கரை-குழம்பு-பட்டுச்சீலைக்கும்பெயர், ஒளியென்பது, யானைக்கூட்டம்-ஒழுங்குக்கும்பெயர்-கோளியென்பது-ஆலமரம்-அத்திமரம்-கொளவோன்-பூவாதுகாய்க்குமரத்திற்கும்பெயர், மீளியென்பது, திண்ணியன்-வலிமை-மேன்மையுள்ளோன்-பெருமைக்கும்பெயர்-எ-று. ௫

அளைதயிர்முழைபுற்றுக்கும் அசனியேயுருமேச்சி
முளைபரிமீதுகட்டு மயிர்பிறமயிருமோதுங்
கிளையெனப்வோர்பண்மூங்கில் சேர்ந்தோர்கிளைத்தலுமபோ
இளைபுயலிளைமைவேலி தலைக்காவலிவைநாற்பேரே

(இ-ள்) அளையென்பது. தயிர்-மலைக்குகை-புற்றுக்கும்பெயர், அசனியென்பது, இடி-வச்சிராயுதத்துக்கும்பெயர். உளையென்பது, குதிரைச்சட்டுமயிர், பிறமயிருக்கும்பெயர், கிளையென்பது, ஏழிசையிலொன்று-மூங்கில்-உறவு-கிளைத்தலுக்கும்பெயர், இளையென்பது, மேகம்-இளைமை-வேலி-தலைக்காவலுக்கும்பெயர்-எ-று. ௬

உள்ளலேநினைவுள்ளான்போ உழப்பெனப்பவலியுற்சாகம
ஞெள்ளலேபள்ளம்மேன்மை நீணடவீதியுமபபேரே
எள்ளலேநகையிழிப்பாம யாமெனத்தற்கிரவுசாமம
ஞொள்கல்சோம்பிளைத்தலச்சக்குறிப்பெனறுநுவலறபாலாம்

(இ-ள்.) உள்ளலென்பது, நினைத்தல்-உள்ளானகுருவிக்கும்பெயர், உழப்பென்பது, வலிமை-உற்சாகத்திற்கும்பெயர், ஞெள்ளலென்பது பள்ளம்-மேன்மை-தெருவிற்கும்பெயர், எள்ளலென்பது, நகைப்பு- இழிவுக்கும்பெயர்-யாமமென்பது, தென்றிசை-இராத்திரி-சாமத்திற்கும்பெயர். ஞொள்கலென்பது, சோம்பல்-இளைத்தல்-அச்சக்குறிப்புக்கும்பெயர்-எ-று. ௭

வள்ளெனபகாதுகூர்மை வலிவளமவாளேவாராம
வெள்ளையேழுசலிசங்கு வெளிறுவெள்ளாடுவெண்பா

RangaRakes tamilnavarasam.com

களவனேமுசுநண்டியானைகருநிறத்தவனேசோரன்
பள்ளியூர்சிற்றூர்கோயில்பாயல்கண்படைநீத்தோரூர்

(இ-ள்) வள்ளென்பது, காது-கூர்மை-வலிமை-வள்ளை-வாளாயுதம் வார்க்கும்பெயர், வெள்ளையென்பது, பலபத்திரன் சங்கு-வெண்மை-வெள்ளாடு-வெண்பாவிற்கும்பெயர், களவனென்பது-முசு-நண்டு-யானை- கரியன்-திருடனுக்கும்பெயர், பள்ளியென்பது, மருதநிலத்தூர்-சிற்றூர்-கோயில்-மக்கட்படுக்கை-நித்திரை-முனிவரிருப்பிடத்திற்கும்பெயர்-எ-று, ௮

விளக்கொளிசோதிநாளாம்வேள்வியேமகநாளீதல்
அளக்கரேபுடவிசேறுப்பளங்கடல்கார்த்திகைப்பேர்
திளைத்தலேயனுபவித்தல்செறிதலேநிறைதனப்பேர்
இளைத்தலேமெலிவிரங்கலென்றூழேயிரவிவெய்யில்

(இ-ள்) விளக்கென்பது. தீபம் - சோதிநாளுக்கும்பெயர். வேள்வியென்பது, யாகம்-மகநட்சத்திரம்-கொடுத்தலுக்கும்பெயர், அளக்கரென்பது, பூமி-சேறு - உப்பளம்-கடல் - கார்த்திகைக்கும்பெயர் - திளைத்தமென்பது, அனுபவித்தல் - நெருங்கல் - நிறைதலுக்கும்பெயர், இளைத்தலென்பது, மெலிதல் - இரங்கலுக்கும்பெயர், என்றூழென்பது, சூரியன் - வெயிலுக்கும்பெயர்,எ-று, ௯

பிள்ளையேவடுகன்காக்கைபெட்டலேவிரும்பல்வேண்டல்
மள்ளரேமள்ளர்வீரர்மறவர்க்குங்குறவர்க்கும்பேர்
உள்ளமேமுயற்சிநெஞ்சாமுஞற்றிழுக்கொடுதாளாண்மை
வள்ளியேவல்லிசெங்கைவளைபுனையிழைநாற்பேரே

(இ-ள்) பிள்ளையென்பது, வயிரவன்-காக்கைக்கும்பெயர், பெட்டலென்பது, ஆசை-ஆசைப்பெருக்கத்திற்கும்பெயர், மள்ளரென்பது, உழவர்-படைவீரர்-திண்ணியோர் குறிஞ்சிநிலமக்களுக்கும்பெயர், உள்ளமென்பது, முயற்சி நெஞ்சுக்கும்பெயர். உஞற்றென்பது, இழுக்கம்-முயற்சிக்கும்பெயர், வள்ளியென்பது, படர்கொடி-கைவளை-ஆபரணத்திற்கும்பெயர்,எ-று. ௰

காளமேயூதுகொம்புகழுநஞ்சுகருமைநாற்பேர்
வேளறுமுகன்காமன்பேர்விழுதியூன்கொடுமைசெல்வம்
கோளிடையூறொன்பான்கோள்கொலைகுணம்வலிபொய்கொள்கை
ஞாளியேசுணங்கன்கள்ளாநான்முகனருகன்வேதா

இ-ள் காளமென்பது, ஊதுகொம்பு-கழுமரம்-விடம்-கறுப்புக்கும்பெயர், வேளென்பது, குமரன்-மன்மதனுக்கும்பெயர், விழுதியென்பது, தசை-பொல்லாங்கு- செல்வத்திற்கும்பெயர், கோளென்பது-இடையூறு-நவக்கிரகம்-கொலை-குணம்-வலிமை-பொய்-கொள்ளலுக்கும்பெயர், ஞாளியென்பது, நாய்-கள்ளுக்கும்பெயர், நான்முகனென்பது, அருகதேவன் - பிரமதேவனுக்கும்பெயர்-எ-று. ௰௧

RangaRakes tamilnavarasam.com

களமென்பமிடறுகோட்டிகளர் நிலக்கருமைநாற்பேர்
தளமிலைபடையேசாந்துதாழிபூவிதழேமடை
அளகமேமாதரோதியறனமயிர்க்குழற்சிமுப்போ
தளைவிலங்கொடுதொடர்சிதாட்சிலம்பாண்மயிர்ப்பேர்

(இ-ள்) களமென்பது, கழுத்து-கூட்டம்-களர்நிலம்-கறுப்புக்கும்பெயர் தளமென்பது இலை-சேனை-சாந்து-சாடி பூவிதழ்-உப்பரிகைக்கும்பெயர் அளகமென்பது, பெண்மயிர்-சீர்-மயிர்க்குழற்சிக்கும்பெயர், தளையென்பது, விலங்கு-தொடர்பு-காற்சிலம்பு-ஆண்மயிர்க்கும்பெயர்-எ-று. ௰௨

புள்ளுவண்டவிட்டம்புட்போபுளகந்தாப்பணங்குழிப்பாம்
களவென்பகளவுகளளாங்கனலிசூரியனுடன்று
அளறுளஞ்செறிவுகாதோடயிலவலிப்பறிருமப்பாம
வெள்ளமெண்மிகுதிமுந்நீர்வேணுவேழமூங்கில்வில்வாள்

(இ-ள்) புள்ளென்பது, வண்டு-அவிட்டநட்சத்திரம்-பறவைக்கும்பெயர் புளகமென்பது, கண்ணாடி-மயிர்சிலிர்த்தலுக்கும்பெயர், களவென்பது, களவு-களருக்கும்பெயர், கனலியென்பது, நெருப்பு-சூரியன்-பன்றிக்கும்பெயர் அளறென்பது, வலிமை-நெருக்கம்-கீர்த்துகாமை-அளருக்கும்பெயர், வெள்ளமென்பது, ஓரெண்-மிகுதி-கடலுக்கும்பெயர், வேணுவென்பது. மூங்கில் - வில்-வாளாயுதத்துக்கும்பெயர்-எ-று. ௰௩

வாளென்பதொளிகட்கப்பேர்வல்லரிதளிர்பசுங்காயாம்
கூளிபேர்தமரோருசுகுறல்படைத்தலைவன்கூட்டம்
தோளெனப்புயங்கையாகுஞ்சுந்தரியுமையேசூண்டன
தேளெனப்படனுடநாளேவிருச்சிகந்தெறுக்காலும்பேர்

(இ-ள்) வாளென்பது, பிரகாசம் வாளாயுதத்திற்கும்பெயர், வல்லரியென்பது, தளிர்-பசுங்காய்க்கும்பெயர், கூளியென்பது, பேய்-உறவு எருது-குற்றம்-பூதம்-படைத்தலைவன் - கூட்டத்திற்கும்பெயர், தோளென்பது தோள்-கைக்கும்பெயர், சுந்தரியென்பது, துர்க்கை-உமைக்கும்பெயர், தேளென்பது, அனுடநட்சத்திரம்-விருச்சிகவிராசி- தேளுக்கும்பெயர்-எ-று

அளியென்பறவுமவண்டுமன்பொடுகொடையுநாற்பேர்
அளவையேயெல்லைநாளாமாசாரந்துகிற்றூய்மைமாரி
விளரியேயிளமையாழிலோர்நரம்பியாழ்நீள்வேட்கை
வளமென்பதவியும்பல்பண்டமுவனப்பமாகும்

(இ-ள்) அளியென்பது, கள்வண்டு அன்பு கொடுத்தலுக்கும்பெயர், அளவையென்பது, எல்லை நாளுக்கும்பெயர், ஆசாரமென்பது, சீலை-தூய்மை பெருமழைக்கும்பெயர், விளரியென்பது இளமையாழிலோர்நரம்பு-நெய'

RangaRakes tamilnavarasam.com

திலத்தியாம - ஆசைப்பெருக்கத்திற்கும்பெயர், வளமென்பது, பதவி-பலபண்டம்-அழகும்பெயர்-எ-று.

வளமேமரக்காலவட்டில்கடிகைவட்டிற்கும்பேர்
வளருநர்பசுவிறைச்சிவரைந்தவர்பொதுவுமாகும்
அளமேனரகஞ்சேறும்மளப்புநீர்புயல்வேயேவாம்
வெள்ளிமேல்விள்ளாப்படைப்போர்வேலனைவேள்வெறியாட்டாள

(இ-ள்) வள்ளமென்பது மரக்கால்-வட்டில - நாழிகைவட்டிலுக்கும்பெயர், வளருநரென்பது, பசுவினிறைச்சி - தசைப்பொதுவிற்கும்பெயர், அளமென்பது, நரகம்-சேற்றிற்கும்பெயர், அமமென்பது,நீர்-மேகம்-மூங்கில்களைக்கும்பெயர். வெள்ளியென்பது விள்ளாமரம்-ஆயுதத்திற்கும்பெயர்,வேலனென்பது, முருகக்கடவுள்-வெறியாட்டாளனுக்கும்பெயர்-எ-று. யசு

காளையேயெருதுபாலைக்கதிபனிளமையோனபேர்
கூளியாகணப்பூதக்கணவீரர்கொலைநிறத்தோர்
கோளகைவட்டமோடுமண்டலிப்பாம்புக்கூறும்
கேள்வியேசெவிகல்விப்போக்கிடங்கழ்வாவியாமே

(இ-ள்) காளையென்பது,எருது-பாலைத்தலைவன்-கட்டிளமையோனுக்கும்பெயர், கூளியென்பது, சினேகிதர்-பூதகணவீரர்-கொலையாளிகளுக்கும்பெயர், கோளகையென்பது, வட்டவடிவு - மண்டலிப்பாம்புக்கும்பெயர், கேள்வியென்பது, காது-கல்விக்கும்பெயர்-கிடங்கென்பது. அகழி-வாவிக்கும்பெயர்-எ-று. யன

இளமையேதன்மைத்தாமமிளமையின்பருவமுப்பேர்
அளறெனநரகஞ்சேறும் அக்காரம்புடைவைவெல்லாம்
கிளரெனக்கிரணத்தோடுகிளர்கோட்டுமலர்ப்பூந்தாதாம்
களரிபோர்க்களங்காடென்பகருமஞ்செய்யிடமுமாமே

(இ-ள்) இளமையென்பது, தாழ்மை காமம்- இளமைப்பருவத்திற்கும் பெயர், அளறென்பது, நரகம் - சேற்றிற்கும்பெயர், அக்காரமென்பது, புடைவை-வெல்லத்துக்கும்பெயர்,கிளரென்பது,ஒளிபூந்தாதுக்கும்பெயர்,களரியென்பது.போர்செய்யிடம்காடுதொழில்செய்யிடத்திற்கும்பெயர்-எ-று

ளகரவெதுகை-முற்றிற்று,

—*—

# றகரவெதுகை

இறவையேபுட்டிலேணியென்புகூர் மிகுதிகூர்மை
குறடெனப்பலகைத்திண்ணைகொறடுமென்பதுவிண்மேகம்
புறவமோர்புள்ளுநாடுமுல்லைநன்னிலனும்போற்றும்
புறணிமேல்குறிஞ்சிமுல்லைநிலத்தொடுபுறமுந்தோலும்

RangaRakes tamilnavarasam.com

# றகரவெதுகை

(இ-ள்) இறவையென்பது, கூடை-ஏணிக்கும்பெயர், கூனென்பதுமிகுதி - குனிக்கும்பெயர், குறடென்பது, பலகை - திண்ணைக்கும்பெயர், கொண்மூவென்பது, ஆகாயம் - மேகத்திற்கும்பெயர், புறவமென்பது. ஓர்பறவை-காடு முல்லைநிலத்திற்கும்பெயர்-புறணியென்பது, குறிஞ்சிநிலமுல்லைநிலம் புறம்-தோலுக்கும்பெயர்-எ-று. க

மறஞ்சினம்பிணக்குக்கூற்றுமலைந்தசேவகமுமாகும்
குறிஞ்சியோரிசையோர்பண்ணே குறிஞ்சிசெம்முள்ளிக்கும்
பேர்,பிறங்கலேமீதிமலைநிறைவொலிபெருமையுமாம்பே
ர்,குறும்பொறைகுன்றுகாடுகுறிஞ்சிநன்னிலத்தூர்ப்பேர்

(இ-ள்) மறமென்பது. கோபம் பிணக்கு-நமன்-வீரத்திற்கும்பெயர், குறிஞ்சியென்பது, ஓரிசை - ஓர்பண்-குறிஞ்சிநிலம்- செம்முள்ளிக்கும்பெயர், பிறங்கலென்பது, மிகுதி-மலை-நிறைவு-ஒலி பெருமைக்கும்பெயர், குறும்பொறையென்பது, மலை - காடு-குறிஞ்சிநிலத்தூருக்கும்பெயர்-எ-று. உ

தாறுவிற்குதையேயெல்லைதாமமாக்குலைமுட்கோலாகு
சேறென்பதும்பிசாரங்கித்திப்புவிழவுகளே
யூறெனபதீமைதீண்டலுயிர்க்கொலையிடையூறென்ப
வேறிடைமுதலுளாகுமிடபமோடெருதுமப்போ

(இ-ள்) தாறென்பது, விற்குதை - அளவு-மரக்குலை- முட்கோலுக்கும்பெயர், சேறென்பது, ரசம் சாரம் - இத்திப்பு-திருவிழா-கள்ளுக்கும்பெயர், ஊறென்பது, தீமை-தொடுதல் - கொலை - துன்பத்திற்கும்பெயர், ஏறென்பது, இடி-அசனிவீரன் - இடபம்-எருதுக்கும்பெயர்-எ-று. ௩

சிறையேவேறிடமாம்புள்ளினசிறகொடுகாவலும்பேர
கறையிறுத்திடம்பிரசவகாறுபடுமாடம்பேணாதே
மூறையெனகோசமேபழமைமுறைமையுமுமாம்பேரோனப
பிறழ்தலேநெடுகமேவேறுபெயர்தலோடொளிவிடும்பேர்

(இ-ள்) சிறையென்பது, வேறிடம்-பறவையினசிறகு-காவலுக்கும்பெயர், கறையென்பது, குடியிறை-உதிரம்-கறுப்பு-உரலென்றுக்கும்பெயர், முறையென்பது, புத்தகம்-பழமை-முறைமைக்கும்பெயர் பிறழ்தலென்பது, நெடுகம் - வேறுபடபோதல் - ஒளிசெய்தலுக்கும்பெயர்-எ-று. ௪

எற்றலேகோடலென்பவெதிர்ந்துபோர்செய்தலும்பே
ராற்றலேபொறைமுயற்சியதிகமேவலியேஞானத்
தேற்றலேவலிபிறப்புத்தோன்றுதலபுகழ்சாற்பேர்
போற்றலேபுகழ்தலோம்பலபுறமெனபமுந்துவீரம

(இ-ள்) எற்றலென்பது, கொள்ளல்-எதிர்த்துபோர்செய்தலுக்கும்பெயர் ஆற்றலென்பது, பொறுத்தல்-முயற்சி-மிகுதி-வலிமை-ஞானத்திற்கும்பெ

RangaRakes tamilnavarasam.com

யர், தோற்றலென்பது, வலிமை-பிறத்தல்-தோன்றுதல்-புகழ்ச்சிக்கும்பெயர், போற்றலென்பது, புகழ்தல்-பாதுகாத்தலுக்கும்பெயர், புறமென்பது, முதுகு-வீரத்திறத்தும்பெயர்-எ-று. ௫

அற்றமேமறைவுஞ்சோர்வுமவகாசத்தானுமாகும்
குற்றலகுற்றலபறித்தல்குரையென்பதிசைச்சொல்லோசை
யெற்றென்பதிரக்கமொத்தலெறிதலெத்தன்மைத்தென்றல
கொற்றியேதுர்க்கைநாமங்கோவிளங்கன்றுங்கூறும

(இ-ள்) அற்றமென்பது, மறைவு-சோர்வு-சமயத்திற்கும்பெயர், குற்றலென்பது, குற்றல்-பறித்தலுக்கும்பெயர், குரையென்பது, இடைச்சொல்-ஒலிக்கும்பெயர், எற்றென்பது, இரக்கச்சொல்-அடித்தல்-எறிதல்-எத்தன்மைத்தென்றலுக்கும்பெயர் கொற்றியென்பது-துர்க்கை-பசுவினிளங்கன்றுக்கும்பெயர்-எ-று ௬

உறழ்வென்பபுணர்வுகாலஞ்செறிவிடையீடொப்பைம்பே
றுறவியேயெறும்புநீரூற்றுலகங்களமுற்றவுயிர்ப்பே
றுறுகணென்பதுவேதுன்பமுறுபயமிடிநோய்நாற்பே
றுறுவனேமுனிபுத்தன்பேருலகையேயுரோங்கலோணம

(இ-ள்) உறழ்வென்பது, புணர்ச்சி-காலம்-நெருக்கம்-இடையீடு-உவமைக்கும்பெயர். உறவியென்பது, எறும்பு-ஊற்று-உலகங்களமுற்றும்-உயிருக்கும்பெயர், உறுகணென்பது, துன்பம்-அச்சம்-தரித்திரம் வியாதிக்கும்பெயர். உறுவனென்பது, முனிவன்-அருகனுக்கும்பெயர், உலகையென்பது, உலகை-திருவோணநட்சத்திரத்திற்கும்பெயர்-எ-று. ௭

விறப்பென்பசெறிவுவெற்றிவெருவுதல்பொருதறைபோ
பொறுத்தலேபொறைதாங்கற்போடுந்திதானடங்கும்புத்தி
இறுத்தலேயொடித்தறங்கலியம்புகன்முப்பேரன்ப
கறுப்பிருள்சினக்குறிப்பாங்கன்றுகைவளைகன்றுமே.

(இ-ள்) விறப்பென்பது, நெருக்கம்-வெற்றி-அஞ்சுதல்-யுத்தத்திற்கும்பெயர் பொறுத்தலென்பது. பொறுமை-சுமத்தலுக்கும்பெயர், புந்தியென்பது, புதன்-புத்திக்கும்பெயர் இறுத்தலென்பது, ஒடித்தல்-தங்கல்-சொல்லுதலுக்கும்பெயர். கறுப்பென்பது, கருமை கோபக்குறிப்புக்கும்பெயர் கன்றென்பது, கைவளை-கன்றுக்கும்பெயர்-எ-று. ௮

பொறிமரக்கலமேசெல்வமகூமகளெந்திரங்க
ளறிவிலாஞ்சனையெழுத்தோடைம்பொறிவரியொன்பான்போ
வெறிவெருவுதலகலக்கம்வெறியாட்டுவெட்டநாற்ப
குறிப்பேயத்தூருவைகளஞ்சூழ்நோயென்பதாமே

ம

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) பொறியென்பது, தோணி - ஐஸ்வரியம் - இலக்குமி - சூத்திரம் - அறிவு - அடையாளம் எழுத்து, ஐம்பொறி - தேமலுக்கும் பெயர், வெறியென்பது, அஞ்சு கலக்கம் - மிகு வாசகாடுங்கூத்து வட்டவடிவு வாசனை பிசாசம் - ஆடுகளியாதிக்கும் பெயர் - எ-று. ௯

உறைபொருண் மருந்து வாழ்நாளுணவு வெண்கலமே கார
மொறிபடைக்கலக்கினக்கூடே யெணபிறித்திறிதெய்த
னுறையபாற்பிறையிடச்சொன்ன கரநீர்த்துளி யீராறு
மறைமூழைமோதல் பாறைதிரைசிறறின் மொழியாறுமே

(இ-ள்) உறையென்பது, பொருள் - மருந்து - வாழ்நாள் - உணவு வெண்கலம் உறைப்பு - ஆயுதவுறை ஓரிலக்கக்குறிப்பு பாலிடுபிறை - இடைச்சொல் - நகரம் நீர்த்துளிக்கும் பெயர், அறையென்பது, மலையினுட்குகை - அறைதல் - பாறை - அலை - சிறுவீடு - சொல்லுதலுக்கும் பெயர் - எ-று. ௰

இறைசிவன் கடன் வேந்தன் கையிறையுறுப்பின் ஈறசிறந்தோன்
சிறுமைபுள்ளிறகு தங்கல் சென்னிகூறப்பேராறே
உறையுளென்பது நாடூராமுறுதியே நன்மைகல்வி
பொறைமலை துறுகல் பாரம் பொறைசுமை கருப்பம் பூமி

(இ-ள்) இறையென்பது, சிவன் - கடன் - அரசன் - கையிறை - குடியிறை உயர்ந்தோன் - அற்பம் - பறவையினிறகு தங்கல் - தலை கூன் - வீடு இறப்புக்குப்பெயர், உறையுளென்பது, நாடு - ஊர் பொதுவுக்குப்பெயர் உறுதியென்பது, நன்மை - வித்தைக்கும்பெயர். பொறையென்பது, மலை - துறுகல் பாரம் - பொறுமை - சுமை கருப்பம் - பூமிக்கும்பெயர் - எ-று. ௰௧

இறும்புதாமரையின் பூவே மலைகுறுங்காடுமேற்று
மிறும்பூது தகைமைவெற்போ டதிசயங் குழைதூறொன்றும
உறையுளென்பது நாடூராமுறுதியே நன்மைகல்வி
பொறைமலை துறுகல் பாரம் பொறைசுமை கருப்பம் பூமி

(இ-ள்) இறும்பென்பது, தாமரைப்பூ - மலை - குறுங்காட்டுக்கும் பெயர், இறும்பூதென்பது, பெருமை மலை அதிசயம் - தளிர் சிறுதூறுக்கும் பெயர், கறங்கலென்பது, கழலல் - ஒலிக்கும் பெயர், கதிரென்பது, சூரியன் - பிரகாசத்துக்கும் பெயர், பறம்பென்பது, மலை - முலைக்கும் பெயர். பாயமாவென்பது குதிரை . புலிக்கும் பெயர் - எ-று, ௰௨

கூற்றென்பதியமன் சொல்லாங் கோமானே மூத்தோன் பன்றி
நாற்றநாறுதலே தோன்றல் போனவென்பதகலந்தேற்ற
மூற்றென்பதூன்றுகோலு முறவிபுமிருபேரோது
நோற்றலே பொறைதவம் போதுணங்கென்பருண்மைத்தேமல்

(இ-ள்) கூற்றென்பது. நமன் - சொல்லுக்கும்பெயர், கோமானென்பது மூத்தோன் பன்றிக்கும்பெயர், நாற்றமென்பது, மணத்தல் - தோன்றலுக்கும்பெயர், ஏற்றமென்பது. அகலம் - தெளிவுக்கும்பெயர், ஊற்றென்ப

RangaRakes tamilnavarasam.com

ஊன்றுகோல்-ஊற்றுக்கும்பெயர், நோற்றலென்பது, பொறுத்தல் வருந்துதுக்கும்பெயர், நுணங்கென்பது, நுண்மை.தேயலுக்கும்பெயர்-எ-று. (௱௩)

கற்பமேபிரமன்வாழ்நாள்கற்பகத்தருச்சுவர்க்கம்
பொற்பெனப்படுமழகின்பொலிவுமெய்யப்பணியுமாகும்
உற்பமேபதுமத்தாளாம்பழங்கணேதுன்பமோசை
உற்கைதீரங்கதீக்கொள்ளியுண்டிதான்புசிக்கல்சோறே

(இ-ள்) கற்பமென்பது, பிரமதேவனாயுள்-கற்பகவிருட்சம்-தேவலோகத்திற்கும்பெயர், பொற்பென்பது, அழகு - பொலிவு-அலங்காரத்திற்கும் பெயர். உற்பமென்பது, தாமரை - துகளுக்கும்பெயர், பழங்கணென்பது, துன்பம் - ஒலிக்கும்பெயர். உற்கையென்பது, வான-மீன-கடைக்கொள்ளிக்கும்பெயர், உண்டியென்பது, உண்டல் சோற்றுக்கும்பெயர்-எ-று. (௱௪)

முற்றல்காழ்க்கோட்டமூப்புமுடிவுடனலைத்தற்பேர்
நெற்றியேநுதலின்பேரும்படைவகுப்புமாகும்
கொற்றமேவன்மைவெற்றிகோவரசியனமும்பேர்
எற்றுதல்புடைத்தலோடேயெறிதலுமிருபேராமே

(இ-ள்) முற்றலென்பது, வயிரங்கொள்ளல் முதுமை-முற்றுதல்-வளைத்தலுக்கும்பெயர், நெற்றியென்பது, நெற்றி-படைவகுப்புக்கும்பெயர்-கொற்றமென்பது, வலிமை-விசயம். அரசியலுக்கும்பெயர், எற்றுதலென்பது அடித்தலெறிதலுக்கும்பெயர்-எ-று. (௱௫)

அறுகென்பசிங்கமோர்புல்லுமாகும்பேர்
வறிதென்பதருகலேசற்றறியாமைபயனில்வார்த்தை
மறவியேமயக்கங்கூற்றுமறவிமண்மறதியினங்
குறளெனப்படுமபேயுங்குறுமையுங்கூறும்பேர்

(இ-ள்) அறுகென்பது, சிங்கம்-ஓர்வகைப்புல்-யாளிக்கும்பெயர், வறிதென்பது, குறைதல் சிறுமை - அறியாமை-பயனிலாமொழிக்கும்பெயர், மறவியென்பது, மயக்கம் - இயமனுக்கும்பெயர், மறவியென்பதுகள்-மறதி-இக்கும்பெயர், குறளென்பது, குறளம்பிசாசம்-சிறுமைக்குயர்-எ-று.

விறலென்பவலிவெற்றிப்பேர்விழைந்தோனே காண்பண்பே
ட்டோன், நொறிலென்ப விரைவிற்னொடுநடக்குமு மிருபேரா
மே நொறிலுழிஞ்சியென்பவிருமிந்தல்படைப்பாராய்தல்
பறைபறைவசனத்தோடுபுறக்கும்புள்ளிறக்கும்பேர்

(இ-ள்.) விறலென்பது, வல்லமை-வெற்றிக்கும்பெயர், விழைந்தோனென்பது, சினேகிதன் - கணவனுக்கும்பெயர், நொறிலென்பது; சீக்கிரம் நு

RangaRakes tamilnavarasam.com

டக்கத்துக்கும்பெயர். நெறியென்பது, வழி நியாயத்திற்கும்பெயர், நிருமித்தலென்பது, சிருட்டித்தல்-ஆராய்தலுக்கும்பெயர்-எ-று. (௰எ)

றகரவெதுகை - முற்றிற்று.

—*—

## ணகரவெதுகை.

மனவுநன் மணிசங்கக்காம் வரைமலையிறைவேய் மட்டாக
தனிதனியொப்பினைமைப்பேர் சாந்தமேசுனைமையுஞ் சாந்து
முனைபகைநுனிவெறுப்பா முளைவேயங்குரமே பிள்ளை
இனமிருங்கிளையமைச்சா மெழில்வண்ண மிளமைக்கும்பேர்

(இ-ள்) மனவென்பது மணிபொது - சங்கு - அக்குமணிக்கும்பெயர், வரைவரையென்பது, மலை-கையிறைமூங்கில்,அளவுக்கும்பெயர், தனியென்பது,தனி - ஒப்பின்மைக்கும்பெயர், சாந்தமென்பது,பொறுமை-சந்தனத்திற்கும்பெயர். முனையென்பது,பகை-நுனி - வெறுப்புக்கும்பெயர்,முளையென்பது, மூங்கில - முளை-மகனுக்கும்பெயர், இனமென்பது, சுற்றம் மந்திரிக்கும்பெயர், எழிலென்பது, அழகு இளமைக்கும்பெயர்-எ-று. (க)

ஆனகம்பட்டகத்தின்பேராகுந் துமியுமப்போ
மானமேயளவிலச்சவிமானமேபெருமைகுற்றம்
பானலேபழனநெய்தல்பாங்கரோயிடம்பக்கப்பேர்
மானலெமயக்கமொப்பாமவருடமேமழையுமாண்டும்

(இ-ள்) ஆனகமென்பது, தம்பட்டம்.பேரிகைக்கும்பெயர், மானமென்பது,அளவு-வெட்கம்-விமானம்-பெருமை-குற்றத்திற்கும்பெயர், பானலென்பது, வயல் நெய்தலுக்கும்பெயர், பாங்கரென்பது இடம் பக்கத்திற்கும் பெயர், மானலென்பது,மயக்கம்-ஒப்புக்கும்பெயர்,வருடமென்பது, மழை வருடத்திற்கும்பெயர்-எ-று. (உ)

தானமேமதநீராட்டுத்தருகொடைசுவர்க்கமாம்போ
பீனமேபருமைபாசிபேடென்பமேடியூரோ
நானமேபூசம்பூச்சுநானமுங்குளிக்குநீரும்
வானமாகாயமென்பமழையுலர்மாமுமாமே

(இ-ள்) தானமென்பது,யானைமதம் - நீராடல்-கொடுத்தல்-தேவலோகத்திற்கும்பெயர். பீனமென்பது, பருமை-பாசிக்கும்பெயர், பேடென்பது அலி ஊருக்கும்பெயர், நானமென்பது, பூசம்பூச்சு கஸ்தூரி-குளிக்குநீருக்கும்பெயர்,வானமென்பது,ஆகாயம்-மழை உலர்ந்தமரத்திற்கும்பெயர்

வாணிமேற்கட்டிசேனை வண்டுகிறகொடிமுப்பேரோ
ஆணிமேன்மூலமாணுஞ்சேதமுமாதமுப்போ

RangaRakes tamilnavarasam.com

# ணகரவெதுகை

ஏணையேயொழிவுமற்றை யெனுமிடைச் சொற்குமப்பேர்
ஆணியம்பொழுதுநாளாம் அணந்தையோர்சத்திபூமி

(இ-ள்) வாணியென்பது, மேற்கட்டிசேலை- துகிற்கொடிக்கும்பெயர். ஆணியென்பது, மூலநட்சத்திரம்- கேடு-ஆணிமாதத்திற்கும்பெயர். ஏணையென்பது, ஒழிவு மற்றையெனுமிடைச்சொல்லுக்கும்பெயர், ஆணியமென்பது, காலம்-நாளுக்கும்பெயர், அணந்தையென்பது, ஓர்சத்தி-பூமிக்கும்பெயர்-எ-று. (௪)

முன்னலேநினைவுநெஞ்சா முன்னஞ்சீக்கிரியோடெண்ணம்
கன்னல்சர்க்கரைகரும்பு கரகநாழிகைவட்டிற்பேர்
மன்னனுந்திரட்டாதிப்போ மன்னவன்றனுமாகும்
கின்னரநீர்ப்புள்யாழாம் கிடைக்கைபூதலம்பாயற்பேர்

(இ-ள்) முன்னலென்பது, நினைப்பு-நெஞ்சுக்கும்பெயர், முன்னமென்பது, சீக்கிரம்-கருத்துக்கும்பெயர், கன்னலென்பது, சருக்கரை-கரும்பு-கரகம்-நாழிகை-வட்டிலுக்கும்பெயர், மன்னனென்பது, திரட்டாதிநட்சத்திரமு-அரசனுக்கும்பெயர், கின்னரமென்பது, நீர்வாழ்பறவை-வீணைக்கும்பெயர், கிடைக்கையென்பது, பூமிமக்கட்படுக்கைக்கும்பெயர்-எ-று.

பின்னையேபின்றைதங்கை பெரியமாற்குரியதேவி
கொன்பயனிலாமைகாலங் கூறியபெருமையச்சம்
பொன்னென்பவனப்பிரும்பு பூமகள்வியாழநாற்பேர்
மன்னிலேமிகுதிவேந்தே வாழிவாழ்கெனவிடைச்சொல்

(இ-ன்) பின்னையென்பது, பின்பு - இளையவள் - திருமகளுக்கும்பெயர் கொன்னென்பது, பயனின்மை - பொழுது பெருமை-பயத்திற்கும்பெயர், பொன்னென்பது, அழகு - இரும்பு - இலக்குமி -பிரகஸ்பதிக்கும்பெயர், மன்னென்பது, நிலை - மிகுதி-அரசனுக்கும்பெயர். வாழியென்பது, வாழ்கெனல் - இடைச்சொல்லுக்கும்பெயர்-எ-று. (௬)

வன்னிபிரமசாரி வளர்கிளிசமிசெந்தீயாஞ்
சென்னிதலைபாணன்சோழன் சீருளீயஞ்செம்பாகும்
கன்னிபெண்ணழிவிலாமை கட்டிளமைக்கும்பேரோ
தென்னிசைவனப்புத்தாழை தெற்கொடுகற்புமாமே

(இ-ள்) வன்னியென்பது, பிரமசாரி - கிளி-வன்னிமரம்-நெருப்புக்கும் பெயர், சென்னியென்பது, தலை-இசைபாடுவோன் -சோழனுக்கும்பெயர் சீருளென்பது, ஈயம் - செம்புக்கும்பெயர், கன்னியென்பது, பெண் அழிவின்மை - கட்டிளமைக்கும்பெயர், தென்னென்பது, இசை - அழகு - தென்னமரம் - தெற்கு-கற்புக்கும்பெயர்-எ-று. (௭)

RangaRakes tamilnavarasam.com

குன்றுவே தண்டாரகுன்ற குறைவொடு சயமும்பேர்
அன்றிலோரா புள்ளும்மூல நாளின்வரமிரண்டே
மன்றமே வெளியினோடு வாசமும் பலவும் பேர்
மன்றலே பரிமளப்பேர் மருவு கலியாணமும்பேர்

(இ-ள்) குன்றென்பது, மலை-குறைதல் - சயராட்சதத்திற்குப்பெயர், அன்றிலென்பது, ஓர்பறவை - மூலநட்சத்திரத்திற்குப்பெயர், மன்றமென்பது, வெளி-வாசனை-சபைக்குப்பெயர், மன்றலென்பது, வாசனை விவாகத்திற்குப்பெயர்-எ-று. (அ)

தனமுலை பொன்னுங்கன்று சங்கமுந் தனமும்பேராம்
கனவுநித்திரைமயக்கப்பேர் கலிங்கஞ் சாதகப்புள்ளாடை
கனைசெறிவொலியாமென்ப கவரியே சவரிமேதி
பனுவலே கிளர்நூலாம் படப்பையூர்ப்புறமே தோட்டம்

(இ-ள்) தனமென்பது, முலை - பொன் - பசுவின் கன்று-சங்கம் - பசு முதலியமுப்பொருட்குப்பெயர், கனவென்பது, நித்திரை-மயக்கத்திற்குப்பெயர், கலிங்கமென்பது, வானம்பாடி - சீலைக்குப்பெயர், கனையென்பது, நெருக்கம் - ஓசைக்குப்பெயர், கவரியென்பது, சாமரம்-எருமைக்குப்பெயர், பனுவலென்பது, சொல்- நூலுக்குப்பெயர், படப்பையென்பது, நாட்டுப்புறம் - தோட்டத்திற்குப்பெயர்-எ-று, (௯)

அனந்தனே சிவன்மால்சேடனாயுதனருகனோடே
அனந்தமே முடிவிலாமை யாகாசம் பொன்னும்பேரே
அனங்கமேயிருவாட்சிப்பேராகும் மல்லிகைக்கும்பேர்
தனஞ்சயன் பார்த்தனோடு தழலொரு காற்றுமாமே

(இ-ள்) அனந்தனென்பது, சிவன்-திருமால்-பூமிதாங்கும்பாம்பு பலபத்திரன்-அருகனுக்கும்பெயர், அனந்தமென்பது, அளவின்மை-பொன்-ஆகாயத்திற்கும்பெயர். அனங்கமென்பது இருவாட்சி-மல்லிகைக்கும்பெயர், தனஞ்சயனென்பது, அருச்சுனன் - நெருப்பு - தசவாயுவிலொன்றுக்கும்பெயர் எ-று, (௰)

சானகிசீதைமூங்கிற் றனுவென்பதுடல்வில்லற்பம்
சானுவே மலைமுழந்தாண் மலைப்பக்கந்தானுமாகும்
சோனையே யோணநாளும் விடாமழைசொரிதலும்பேர்
கானலே மலைச்சார்சோலை கடற்கரைச்சோலைப்பேய்த்தேர்

(இ-ள்) சானகியென்பது, சீதை-மூங்கிலுக்கும்பெயர். தனுவென்பது, உடம்பு-வில் - சிறுமைக்கும்பெயர், சானுவென்பது, மலை-முழங்கால் - மலைச்சாரலுக்கும்பெயர். சோனையென்பது, திருவோணநாள்-விடாதுபெய்மழைக்கும்பெயர். கானலென்பது, மலைச்சார்-சோலை-கடற்கரைச்சோலை கானலுக்கும்பெயர்-எ-று. (௧௧)

RangaRakes tamilnavarasam.com

வானென்பவிசும்புமேக மழையொடுபெருமையாறுபேர்
தானையேசேனையாடை படைக்கலந்தானுமாகும்
கானமேதேரிசையேபேழை காடுதுடிப்பாடிப்பெயரோ
டேனலேசெந்தினைப்பேர் தினைப்புனமெனலுமாமே

(இ-ள்) வானென்பது, ஆகாயம்-மேகம்-மழை-பெருமைக்கும்பெயர், தானையென்பது, சேனை-வஸ்திரம்-ஆயுதம்போதுவிற்கும்பெயர், கானமென்பது, தேர்-இராகம்-அரிவிசி-காடு-வனம்பாடிக்கும்பெயர், ஏனலென்பது, செந்தினை-தினைப்புனத்திற்கும்பெயர்-எ-று. (மஉ)

முனியெனப்படியானைக்கன்று முனிவனவில்லகத்திநாற்பேர்
துனியெனப்புலவிநீட்டநதிதுன்பங்கோயாறுகோபம்
பனியெனப்படுக்கநடுக்கம் பயங்குளிர்மைமம்பேரோ
சினையெனமுட்டைபீள மரக்கொம்புறுப்புமாமே

(இ-ள்) முனியென்பது, யானைக்கன்று-தவத்தோன் வில் அகத்திக்கும்பெயர், துனியென்பது, புலவிநீட்டம் - துன்பம், பேதி-நதிக்கோபத்திற்கும்பெயர், பனியென்பது, நடுக்கம்-துன்பம்-அச்சம்-குளிர்ச்சி பனிக்கும்பெயர், சினையென்பது, முட்டை-கருப்பம்-மரக்கொம்புக்கும்பெயர்-எ-று, (மங)

மானேசாரங்கமாவின் பொதுவொடுமகரராசி
கானேநன்மணங்காடென்ன கவவியூர்க்குருவியாமை
ஏனாதிநாவிதன்மந்திரி தந்திரியுமென்ப
மீனேசித்திரைநாளவானமீன் பயலேயுமேயுறைப்பேர்

(இ-ள்) மானென்பது, மான் - விலங்கின்பொது - மகரராசிக்கும்பெயர் கானென்பது, வாசனை காட்டிற்கும்பெயர் கவவியென்பது, ஊர்க்குருவி ஆமைக்கும்பெயர் ஏனாதியென்பது, நாவிதன்-மந்திரி-படைத்தலைவனுக்கும்பெயர், மீனென்பது, சித்திரைநட்சத்திரம்-விண்மீனுக்கும்பெயர்-எ-று

...யறிவுகல்வி நல்லதத்துவஞானமும்பேர்
...க்கலந்தோடெழிலூர்தி விசுப்பிரண்டா
...லைக்குடைப்பேரொழிபுமுழுப்பேர்
...யவடிவமென்ப நிறைந்தசீபுகழுமாமே

(இ-ள்) ஞானமென்பது, அறிவு வித்தை- ஞானநூலுக்கும்பெயர், யானமென்பது, நாவாய்-வாகனம்விசுப்பலகைக்கும்பெயர், ...னமென்பது, இலைக்குடைப்பனறி-பானத்திற்கும்பெயர், மேனியென்பது உருவம்-காந்திக்கும்பெயர்-எ-று. (ருய)

அன்னையேமுன்பிறந்தா டோழிதாயாகுமென்ப
அன்னமேசோறுஞ்சோறு மாகாரமுடனையாடி

RangaRakes tamilnavarasam.com

தற்மையேரியல்பிறேடு தனைமையினிடமுஞ்சாற்றும்
பன்னலேநெருக்கஞ்சொல்லாதனைபருத்தியின்பேருமாமே

(இ-ள்) அன்னையென்பது, அக்காள்-தோழி-தாயக்குப்பெயர், அன்னமென்பது, அன்னப்புள்-சோற்றுக்குப்பெயர், ஆகாரமென்பது, உடம்பு-நெய்-உணவுக்குப்பெயர். தன்மையென்பது, அழகு-குணம்-தன்மையிடத்துக்குப்பெயர். பன்னலென்பது, நெருக்கம்-சொல்-பருத்திக்குப்பெயர்- எ-று. (யசு)

வனமேநீர்மிகுதிகாடு வளர்சோலைதுளசியீமம்
மனுவேமந்திரமோர்நூலோர் மணனேபேயிளமையோடன்
புனையெனபதழகிறேடு பொலிவுமொப்பனையுமாகும்
மனையெனபமனைவிவீடாம் வதுவேமணங்கலியாணம்

(இ-ள்) வனமென்பது, நீர்-மிகுதி-காடு- சோலை-துளசி- சுடுகாட்டுக்கும் பெயர். மனுவென்பது. மந்திரம் ஓர் தருமநூலுக்குப்பெயர் மணனென்பது பிசாசு-இளமை அறிவிலானுக்குப்பெயர். புனையென்பது, அழகு-தெப்பம்-பொலிவு-ஒப்பனைக்குப்பெயர். மனையென்பது. இல்லாள்- வீடு-மனைக்கும் பெயர். வதுவையென்பது வாசனை. விவாகத்திற்குப்பெயர். எ-று. (யரு)

அனவினையொருபெயராகும் விகுசாரியையுமாகும்
மன்னிருங்கலந்தலென்ப திரளோசையிருபேர்வைக்கும்
மின்னவொருசொற்பலபோக இயாகவிருநுதுமுனபான
சொன்னவனகுணபத்திரனருள் சூடுமண்டலவனருனே

(இ-ள்) அன்னென்பது, வினைப்பகுதி-பெயர்ப்பகுதி- சாரியைக்கும் பெயர் கனைத்தலென்பது- இருள்- ஒலிக்கும்பெயர் எ-று. (யஅ)

னகரவெதுகை-முற்றிற்று.

ஆக எதுகை யஅ இ விருத்தம் ஙாகக.

காப்பு க-ஆக ஙாய.

RangaRakes　　　tamilnavarasam.com